# THE MORNING STAR.

**Vol. 57.** **Jaffna, Thursday 4th of Feb., 1897.** **No. 3.**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.


*ERCEIPTS FOR THE "MORNING STAR.*

| | | |
|---|---|---|
| | '97 | |
| India | M. R. Ry. C. Murugasapillai Aval B.A | 2.00 |
| Kankesanturai | Reading Hall, Mavildapuram | 2.00 |
| Straits Settlements | Mr. J. A. Chinniah | 2,50 |
| | '96 | |
| Straits Settlements | Messrs. A. Wyramuttu and J. A. Chinniah | 4.50 |
| Mannar | Messrs. A. Sinnappah, S. David and S. Sittampalam | 5.50 |
| Pallai | Mr. J F. Philips | 2.00 |
| Meesalai | Mr. V. Varitamby | 3.00 |
| Chavagacherry | Messrs. K. Kanagasabai, Meyadeen and J. K. Sinnatamby | 3.75 |
| Manippay | Messrs. A. Suppiah and S. Vytilingam | 2.50 |
| Jaffna, Town | Messrs, H. H. Cameron and A. Kathiravaloo | 3.50 |
| | '95 | |
| Mannar | Mr. A. Sinnappah | 3.50 |
| Straits Settlements | Mr. A. Wyramuttu | 2.25 |
| Varany | Messrs. S. A. Seevaratnam, C. Tambipillai, H Kathirasu. A. Valuppillai, D. Sinnappo & P. Kandar | 7.50 |
| Jaffna, Town | Mr. C. Vathacutty for '94 & '95 | 2.00 |
| Navaly | Mr V. Chellappah | 1.25 |


THE CEYLON STEAMSHIP Co. Ltd.



TheCompany's Steamer "Lady Gordon is appointed to sail from Jaffna for Colombo on the following dates.

Via Paumben 10th. February

" Point Pedro 19th, do

The Steamer "Lady Havelock" is appointed to sail from Jaffna for Colombo on the following dates.

Via Paumben 3rd. March

The S. S. Lady Havelock which is appointed to sail from Colombo south-about on the 10th February with the Supreme Court party will sail for Colombo via Paumban after the close of the Supreme Court Sessions here.

W. MATHER & SON.
*Agents.*

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

OFFICE BANK HALL, SEA STREET, JAFFNA.

The company opens current accounts with sums of not less than Rs 100 and allows interest at 2°/₀ per annum on minimum monthly balances of Rs. 500, and upwards.

Fixed deposits received on the following terms:—
For 12 months interest at 6°/₀ per annum allowed
" 6 " " 5 " "
" 3 " " 3 " "

Approved bills discounted. Money advanced on pledges.

Remit tances made to and from Colombo.
Colombo Bankers, National Bank of India Ltd.
Cheques and foreign drafts and bills of exchange on the Colombo Banks cashed.
Inland and foreign goods imported on Commission.
Office hours from 10-30 A. M. to 4 P. M.

WM. MATHER.
*Managing Director.*

FOR SALE.

GENTLEMEN'S LADIES' AND CHILDREN'S BOOTS AND SHOES

also Harness, Curry Combs, Brushes. Knee Caps, Driving whips, Spare reins, Bits, Horse cloths, Dubbing, Elleman's embrocation, &c.

WATERBURY WATCHES

The "Trump" Gentleman's size Rs. 8 00
Ladies' size - - - - " 12.00

*ALL AT COLOMBO PRICES*
at the Store department of
**The Jaffna Commercial Corporation Ltd.**


NOTICE.

The Entrance Examination for a New class in the Oodooville Female Seminary will be held at Oodooville on Wednesday the 17th of February beginning at 9 A M.

THOS. SNELL SMITH.
Manager.


**FOR SALE.**

BRILLIANTS!! BRILLIANTS!!

Calicut Tiles—first quality.
Calicut Flooring bricks.

**Wm. Mather & Son.**


NOTICE.

Any person thinking of employing Sinnatamby Nagamany of Columbuturai will do well to refer to me.

JAMES PRICE TODD.
Kotta, Pallai.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No.814

In the Matter of the Estate of the late Nanamuttamma wife of Ramanatar Kandavanam of Batticotta Deceased.
Ramanatar Kandavanam of Batticotta Petitioner.
1. Chellamma widow of William Dudley of Nellore
2. Vettivaloe Mylvaganam of do and
3 his wife Ponnammah of do now at Kandy Respondents.

This matter of the Petition of Ramanatar Kandavanam of Batticotta praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Nanamuttamma wife of Ramanatar Kandavanam of Batticotta coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge on the 31st day of December 1896 in the presence of Mr. T. C. Changarapillai Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 29th day of December 1896 having been read it is declared that the Petitioner is the widower of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 12th day of February 1897 show sufficient cause to the satisfaction of this Court to the contrary

Signed this 31st day of December 1896. | H. H. CAMERON, District Judge

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No.

In the Matter of the Estate of the late Mankalam wife of Appakkutty Kanapathipillai of Charasalai Deceased.
Velauther Thampoo of Charasalai Petitioner.
1 Appakkutty Kanapathipillai
2 Velauther Saravanamutto and
3 Velauther Theagarasah all of Charasalai Respondents.

This matter of the Petition of Velauther Thampoo of Charasalai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Mankalam wife of Appakkutty Kanapathipillai coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 13th day of January 1897 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 11th day of January 1897 having been read it is declared that the Petitioner is the brother of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 16th day of February 1897 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 13th day of January 1897. | H. H. CAMERON, District Judge.

ORDER NISI.

In The District Court of Jaffna.

Testamentary Jurisdiction. } No. 819

In the Matter of the Estate of the late Chivakamipillai wife of Vyramutto Chuperamaniem of Neervaly. Deceased
Vyramutto Chuperamaniem of Neervaly Petitioner
Vs.
1. Visuvanather Kanthapillai & wife
2. Poothattaipillai of Neervaly. Respondents.

This matter of the Petition of Vyramutto Chupramaniem of Neervaly praying for Letters of Administration to the estate of the above named deceased Chivakamipillai wife of Vyramutto Chuperamaniem of Neervaly coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 19th day of January 1897 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 19th day of January 1897 having been read it is declared that the Petitioner is the husband and next of kin of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 26th day of February 1897 show sufficient cause to the satisfaction of this Court to the contrary,

Signed this 19th day of January 1897. } H. H. CAMERON. District Judge.

FISCAL'S SALE.

Fiscal's Office
Batticaloa 21st January 1897.

No. 1190.
In the District Court of Batticaloa.
V. V. Vinasitampy Mudaliyar Plaintiff.
*Vs,*
Mrs. Hannah Somanader Defendant.

Notice is hereby given that on Saturday, the 27th February 1897 at 11 o'clock in the forenoon, will be sold by Public Auction at the spot the following property of the defendant specially mortgaged and hypothecated in and by bond No. 3 dated 6th January 1892 and declared by judgment in the above case specially bound and executable for that judgment for the recovery of Rs. 750 and costs Rs. 132.82½ and interest at 16⅔ p. c. from 6th January 1892.

The paddy land called Vaical Pattu at Valanithai Vattai in Karavagu Pattu bounded on the East by paddy field called Sellapattu Mullai Waiyal and Mujan Chonaga Vayel, West by Nuaiady Elavisam and river, North by Vaikal Pattu Pothu and South by river and land of others. In extent 31 acres 3 roods and 34 perches together with the inlets, outlets and the appertinances.

K. C. KADIRGAMAR,
Deputy Fiscal.

DOMESTIC OCCURENCE.

BIRTH.

On the 15th ultimo at 3.30 A. M. Mrs. C. A. J. Sophiah, wife of Dr. C. S. T Joseph at her residence in Sogana, Pussellava, of a son,

## Local & General.

**Weather.** The dew at night is heavy as usual in these months, and the heat in the day time is great, so that the extremes of temperature cause fever, cold and other illness in every part of the Peninsula.

**The small Tenements Ordinance.** The Jaffna Town has been brought within the operation of the small tenements Ordinance of 1882, by a proclamation in the Government Gazette of the 29th ultimo. The limits of the town have been defined by the said proclamation. Much annoyance given to house owners and landed proprietors by tenants, will, we trust, be prevented by the operation of the ordinance.

**Mr. A. Mailvaganam.** We congratulate Mr. Mailvaganam of Copay on the appointment which the Governor has conferred on him as the Justice of the Peace for the District of Jaffna. The appointment appears in the Gazette of the 29th ultimo. Mr. Mailvaganam is a gentleman known throughout Jaffna, and the honorific appointment will make him generally useful.

**The English University Scholarship.** In the month of May next, a competitive examination for a scholarship of £ 150 per annum tenable for four years will be held in the office of the Director of Public Instruction. Further particulars of this examination are given in the gazette of the 29th ultimo.

**Inland Mail service.** From the first of this month mail is despatched at 3 P. M. from the head office for transmission to Point Pedro, Kankesanturai and Kaits.

**Swami Vivekananda.** The Sivite community gave a grand reception to Swami Vevakananda who arrived here by coach on the morning of the 24th ultimo. A neat and spacious pandal was erected in front of the "Hindu College" and he was received with great pomp in the pandal on the evening of the same day. He delivered two addresses one on the night of the 24th ultimo and the other on the night of the 25th both in the same pandal. He left for Pamban on the night of the 25th.

**Wesleyan Mission.** The Annual Synod has been this time appointed to be held at Batticaloa. The Missionaries from here left for Batticaloa by steamer on the 30th ultimo.

**Rev. G. J. and Mrs. Trimmer.** We are happy to welcome back amongst us Rev. and Mrs. Trimmer the Chairman of the Wesleyan Mission, Northern circuit, after about a year's furlough in England. They arrived here by the Steamer on the 29th ultimo and a fitting reception was given to them by the members of the Jaffna town church. A small service of praise and thanksgiving was held in the Mission house which was tastefully decorated and crowded with those connected with the Church. Mr. T. M. Tampoo presided on the occasion and Dr. Wm. Paul read an address of welcome to which Rev. and Mrs. Trimmer replied in feeling terms. Rev. and Mrs. Trimmer have much improved by the change to England and we pray that the Lord will give them good health and vigor and success in the work in Jaffna.

**Jaffna Commercial Corporation.** A special meeting of the Directors of this successful Corporation was held in its Office room on the 2nd inst. Amongst other matters it was sanctioned to increase the rate of interest payable to fixed depositors. In future fixed deposits for 12 months will carry interest at 6 per cent, for 6 months at 5 per cent and 3 months at 3 per cent. This is no doubt an indication of the success of the Company and an inducement to the public to deal with it.

**Sun-spots.** An enormous spot 120,000 miles long appeared on the 2nd of last month, and its appearance considerably disturbed the magnetic needle. When it was very near the centre of the sun's disc, a terrible hurricane took place in North Australia, wrecking the town of Port Darwin, so that for a day Australia was cut off from the rest of the world. We can hardly deny a connection between the two. When a hurricane swept over St. Louis U. S. A. doing immense damage last year, a large spot was near the sun's centre. The spot has now come around again into sight, but is considerably reduced in size.

CONTRIBUTIONS TO THE JUBILEE FUND J. N. E. S.

| | | |
|---|---|---|
| S. F. G. Carpenter Esq. | part payment | 25 00 |
| T. C. Changarapillai Esq. | do. | 15.00 |

T. P. HUNT.
Secretary.
December 12th 1896.

**The famine.** There are over a million and three quarters of persons on famine relief, chiefly in the north west provinces of India. The Famine Fund in London reached £140,000 last week.

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௫௭ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௲௮௱௯௰௭ம் ௵ மாசி ௴ ௪ ௳ வியாழக்கிழமை. [சங்கியை, ௬



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றெட்)

இந்தக் கொம்பனியாரின் "லேடிகோடன்" என்னுங்கப்பல் பின்வருந்தேதிகளில் யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்புக்குப்போகஇருக்கின்றது.

பாம்பன்வழியாக மாசி ௴ 10 ௳ பின்னேரம்
பருத்தித்துறைவழியாக " 19 "

"லேடிஅவலக்" என்னுங் கப்பல் பின்வருந்தேதிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப்போக இருக்கின்றது.

பாம்பன்வழியாக பங்குனி ௴ 3 ௳ பின்னேரம்

மாசி ௴ 10 ௳ கொழும்பிலிருந்து தென்பக்கமாகப் பறப்படஇருக்கும் "லேடி அவலக்" கப்பல் யாழ்ப்பாணத்திற் சுப்பிரீங்கோடு முடிந்தவுடன் பாம்பன்வழியாகக் கொழும்புக்குப் போகும்.

Wm Mather, & Son. Agents.

## விளம்பரம்.

மானிப்பாய்குடி Dr. C. T. Mills அல்லது முருகேசர் எதிர்நாயகமாகியநான் சகலருக்குமறிவிப்பது யாதெனில், வட்டுமேற்கிலிருந்து காலஞ்சென்றுபோன வயிரவனாதர் சின்னத்தம்பியுடைய வளவுக்குக் கிழக்குப்புறமாகவிருக்கும் வட்டுக்கிழக்கு இறையிலுள்ள "இலந்தைப்புலமும், ஆளியகாடும்" என்சிறகாணி பர. நில. இலா. கூஇ. எல்லை வடக்கு ஒழுங்கை கிழக்கு முருகர் தெய்வாணையும் முருகேசர் வயித்திலிங்கமும். தெற்கு அமரிக்கன் மிஷியோன். மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் யோட்ஷயாளும் சின்னத்தம்பி கைம்பெண் செய்வாணப்பிள்ளையும்.

இந்தக்காணி ௲௮௱௯௰௫ம் ௵ துவக்கம் என்னுடையதாயிருக்கிறது சிலதகுந்தநியாயத்துக்காக இதின் அறுதியுறுதி நம்பிக்கையின்பேரில் முதல்வட்டுமேற்குக்குடி நாகனாதர் ஆறுமுகத்தின்பேரிலும், மறுபடி வட்டுமேற்குக்குடி காலஞ்சென்றுபோன வயிரவனாதர் நவசிவாயத்தின்பேரிலும் முடித்திருக்கிறேன். இப்போ குறித்த என்னுடையகாணியைப்பற்றி வியாச்சியமிருக்கிறபடியால் யாதொருவரும் இக்காணியை பற்றி, ஈடு. அறுதி, நன்கொடை, உபசம், முதலியன யாதொன்றும் செய்யவும் செய்விக்கவும்படாதென்றும் விசேஷமாக எந்தப்பிரசித்த நொத்தாரிசும் இக்காணியைப்பற்றி எவ்வித உறுதியாவது சாதனமாவது எழுதப்படாதென்றும் இத்தால் வெளிப்படுத்தி விளம்பரம் பண்ணுகிறேன்.

C. T. Mills.


## உதயதாரகை ௲௮௱௯௰௭ம் ௵ மாசி ௴ ௪ ௳.

அத்துவைதம்.—Vedantism.—முன்குறித்திருந்தபடியே விவேகானந்தசுவாமி கொழும்பிலிருந்து கண்டிநகர்மார்க்கம் மத்தியரூட்டுக் கோச்சுவழியாய்ச் சென்ற ௴ ௨௪ ௳ யாழ்ப்பாணம் வந்ததித்தனர். அன்றிரவு இந்துக்கல்லூரிக்கு முன்பாகஇடப்பட்டிருந்த அலங்காரப்பந்தரிலே யாழ்ப்பாணத்துச் சைவப்பிரபுக்கள் பலர்கூடிய சபையிலே யவர்க்கோருபசார வாழ்த்துப்பத்திரம் வாசிக்கப்பட்டது. சுவாமியதற்குவிடையாக, ஐரோப்பிய அமரிக்கதேயத்தவர்களின் அறிவு நிலை, சமய நிலைகளைப் பலவகையாய் விகழ்ந்தும் இந்துக்களை மிகப்புகழ்ந்துங்கூறி வந்திருந்தோர் மனதிற் தேசாபிமானஞ் சமயாபிமானங்களுண்டாகச் செய்தனர். அடுத்தநாள் "இந்துமதம்" என்னும்விஷயத்தில் உபந்நியாசிப்பாரென்னுஞ் செய்தி ஊரெங்குமெட்டவே, அமரிக்க ஐரோப்பியர்க்கு அதிசயத்தையுண்டாக்கியதெனக் கூறப்படும் சுவாமியின் இந்துமதத்தை அறியுமாவலுற்றோராய் நாலுதிசைகளிலுமிருந்து சைவர், கிறிஸதவர், கதலிக்கரெனப்பல சமயத்தினரும் அன்றிரவு ஏழுமணிவரையிற் பந்தரைநிரப்பினர். இந்தசமயமென்பதில் ஒன்றேடொன்று கறுமி உறுமிச் சீறிச்சினந்த இடைவிடாது வாதவல்யுத்தம்புரியும் பௌத்தம், அருகம், வைஷணவம், சைவமெனப் பலசமய கோட்பாடுகளடங்கவும் விவேகானந்தசுவாமி யெல்லாவற்றையுந் தழுவிக் கிருஷணனுபதேசமெனக்கூறப்படும் பகவத்கீதையின் போக்கையனுசரித்து, வாதராயணரால் ஸ்தாபிக்கப்பட்டதும் அகம்பிரமம் (நான்கடவுள்) எனக்கூறுவதுமாகிய வேதாந்த ஞானத்தையே மிகுதியும் நிலைநிறுத்தவாராயினர். வேதாநதஞானம் அத்துவைதம் (இரண்டின்மை) என்றும் பெயர்பெறும். அமரிக்காவாதிய இடங்களிலிவர் பிரசங்கித்தது மிகுதியும் பதஞ்சலியின் யோகஞானமென்பதெமதுவிளக்கம்.

இந்துக்களின் பூர்வீகஞானநூற்களாகிய உபநிடதங்களிற் கூறப்படும் ஞானநெறிகள், நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தமென அறுவகைப்படும். அவை முறையே கௌதமர், கணடர், கபிலர், பதஞ்சலி, செயமினி, வாதராயணரென்பவர்களால் ஸ்தாபிக்கப்பட்டன. இவையொன்றுக்கொன்று மாறுபாடுள்ளனவாயொன்றையொன்று பழிப்பனவென்பதும் இவற்றுக்கும் இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களுக்குமொற்றுமையில்லையென்பதும், அவற்றைச்சமஸ்கிருதத்திலாராய்ந்தபடித்துணர்ந்த சேர். மொனியர் உவில்லியம்ஸ் (Sir Monier Williams) மாக்ஸ்முல்லர் (Max-Muller), யோன் மூயர் (Dr. John Muir) ஆதிய கல்விமான்கள் கருத்து. இவற்றுள் வேதாந்தகோட்பாட்டை விரித்துரைத்து அதை நிலைநிறுத்தும்படி பௌத்தர், சமணராதியோரோடு பெருஞ்சமர்புரிந்தவர் சங்கராச்சாரியரேயாம். "வேதாந்தசாரம்" என்னும் நூலே இக்கோட்பாட்டையினிதுவிளக்குவது. வேதாந்தம் தமிழ்நாடுகளுட்புகுந்தகாலத்துச் சைவசித்தாந்த ஆதீனத்தார் குமிறெலிசெய்தெழும்ப சித்தாந்திகளுக்கும் வேதாந்திகளுக்குமிடையிற் பெரும் பூசலுண்டாயிற்று. இப்பூசலிடையறாது நடந்துகொண்டேவருகின்றது. "அத்துவைததூஷணர்கள்" "பரிகாரங்கள்" "நிராகரணங்கள்" மெத்த! மெத்த! திருச்செங்கோட்டு விவேகதிவாகரனுதியாம் பத்திரங்களிலு மிச்சமர்நடக்கின்றது. திராவிடதேயத்தவர்களில் மிகுதியானோர் சைவசித்தாந்த பட்சத்தாராகவே, விவேகானந்தசுவாமியின் அத்துவைத பிரசாரண மெவ்வளவிலங்கீகாரம் பெறுமோ அறியோம்.

யுத்திக்கும் அனுபவத்துக்குமிணங்க, கடவுள், ஆன்மா வாதியன பிரத்தியேகவஸ்துக்களேயெனச் சித்தாந்தங்கூற ஏகான்மவாதமாகிய வேதாந்தமோ பிரமமொன்றேயன்றி வேறுவஸதில்லையென்றும் கடவுள், ஆன்மா, உலகமாதியன பிரத்தியேகவஸதுக்களாய்த் தோற்றுவது ஆன்மாவை மாயைபற்றியிருப்பதினாலாகிய பொய்க்காட்சியென்றுங்கூறுகின்றது. வஸதுக்களெல்லாவற்றிலுங் கடவுள் கலந்திருக்கிறுரெனத் தாயுமானவராதிபோர் கூறுஞ் சகத்தவாத (Pantheistic) கொள்கையுமமைக்கவ்வளவுதூரப்பட்டதன்றாக்கும். ஆயின் வேதாந்தகோட்பாடதுவன்று. உலகில், கடவுள், மனுஷன், விலங்கு, தாபரம், கல். மண்ணெனத் தோற்றுங்காட்சிகள் மாயக்காட்சிகளாம். கடவுளே ஆன்மாவும் ஆன்மாவே கடவுளுமாம். அகம்பிரமம் (நான்கடவுள்) என்பது வேதாந்தசாரமாகவே மனுஷன் தன்னை வேருக்கித் தனக்குமேற்பட்ட கடவுளொருவரிருக்கிறுரெனப் பாவித்துத் தொழுவதும் அழுதசெபிப்பதும் சமயநிலையனுசரிப்பதும் பைத்தியமும் மதயீனமுமாகின்றது. வேதாந்தி வஸ்துக்களைப் பன்மைப்படுத்தி நான், நீ, அவன், எனச்சம்பாஷிப்பதும் வாதிப்பதும் கொண்டாடுவதுங்கூடாமையாகின்றது. ஆனபடியாலாக்கும் "பேச்சுகெட்டது வேதாந்தம் பேசாமற்கெட்டது சித்தாந்தம்" எனப்பழமொழியுமுண்டாயது. அத்துவைதப்பாடிவ்வாறிருக்க விவேகானந்தசுவாமி தம்விவேகசாமர்த்தியத்தால் வந்திருந்தாரெல்லோரையுஞ் சமன்படுத்தி பௌத்தம், மகமதீயமாதிய எல்லாச் சமயங்களும் முத்திக்கு வழிகாட்டுவனவேயெனக்கூறியதோடு எல்லவருந் தத்தம் நெறியினிற்கலாமெனத் தைரியஞ்சொல்லி முடித்தனர். பிரசங்கமுடிவில் விவேகானந்தசுவாமியோடு கூடிவந்த மூவருள் இங்கிலந்திலிருந்து புறப்பட்ட கப்றின்சிரியரெழுந்து, "நான்கடவுள்" என்னும் ஞானத்தை லண்டோர்பட்டினத்திலிருந்து கண்டுபிடித்தல்கூடாதாகையால் இந்தியாசென்றுணரும்நோக்கமாய் யானும் மனைவியும் புறப்பட்டோமென்றனர். மூன்றுமாளாகிய கொட்டுவின் என்பவர் அமரிக்காவிலிருந்து சுவாமியோடுவந்தவர். இவர் சந்நியாசியாகிச் சுவாமியோடுதிரிகின்றாராம்.

எமது கைக்கெட்டிய ஓர் புத்தகத்திலிருந்து சுவாமியின் உண்மையானபெயர் நோரேந்திரநாத் டற் என்றும், இவரது தகப்பனார் நியாயப்பிரமாணிகனாயிருந்தவரென்றும், இவரது இனத்தவர்கள் சிலர் கிறீஸ்தவர்களாயிருக்கிறார்களென்றும், இவர் ஸ்கொத்லந்து மிஷன் கல்லூரியிற் படித்து வி. ஏ. (B. A) பட்டம்பெற்றவரென்றும், அப்பால் நியாயப்பிரமாணம் வாசிக்கத்தொடங்கிப் பின் அதை விட்டுப் பிரமசமாசியத்தாரோடு கூடித்திரிந்து கடைசியாய் வங்காளிகளிற் பலரைச் சந்நியாசிகளாகும்படி ஏவிய பரமகாம்ச என்னும் சந்நியாசியோடு சேர்ந்து தாமும் சந்நியாசியாயினரென்றும், அறிந்தோம்.

அமரிக்காவின் சமயசங்கத்துக்கு இந்தியாவிலிருந்து மறு இந்துமதங்களின் பிரதிஸ்தராய்ச் சென்ற மூசம்டார் ஆதியோரிவரிலும் அதிகம் அறிவுள்ளவர்களாம். அவர்கள் சுவாமியைப்போற் காவிவஸ்திரமும் தலைப்பாகையுந் தரியாமையால் இவ்வளவாய் அமரிக்காரதியோர் கவனத்தை வரித்திலராம். "ஆவியின் முதிர்ச்சியடைந்த வேதாந்த ஞானமும் புத்தனின் சந்தேகவர்தமும் (Agmosticism), சமணரின் நிரீச்சுரவாதமும் (Atheism), கீழ்ப்பட்டகொள்கைகளாகிய விக்கிரகாராதனை, பௌராணிக கட்டுக்கதைகளும் (Mythology), எல்லா மிந்துமதத்தி லிடம்பெறுகின்றன" என்பது விவேகானந்தசுவாமியின் வாக்கு மதாபிமானிகள் தேர்ந்துணர்க.

## யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather.—மாரிகாலமழையினுல் நீர்நிலைகளொன்றுபட்டு அசுத்தமடைந்தமையானும் வெயில்கடுமையாய் எறிப்பதால் நீர்நிலைகளிலும், நிலத்திலுமிருந்து அசுத்தக்காற்றெழும்புவதாலும்பனியதிகமாய்ப்பெய்வதினுலும் ஊருக்குள் காய்ச்சல், வயிற்றுவளைவு, சின்னமுத்து, செங்கண்மாரி, சிரங்கு ஆதியநோய்களினுமதிகமாயிருக்கின்றன.

கனம். திறிமர்ஐயரும்அம்மாவும்.—Rev and Mrs Trimmer.—இங்கிலாந்துசென்றிருந்த, வடலங்கை உவெசிலியன் மிஷன்தலைவர் கனம் திறிமர் ஐயரும் அம்மாவும் சென்ற ௴ ௨௩ ௳ திகதி யாழ்ப்பாணத்திறங்கி மேளதாளவாத்தியங்களுடன் தம் பழய ஸ்தானத்துக்கழைக்கப்பட்டனர். அவரிடத்திலிருந்த கனம் றெஸதாமிச்ஐயர் பருத்தித்துறைசெல்ல அங்கிருக்கும் கனம், நாப் ஐயர் இங்கிலந்து செல்வர்.

சமாதானநீதவான்.—Justice of Peace,—கோப்பாய்ப் பிரபு அ. மயில்வாகனம்பிள்ளையவர்களுக்கு சமாதானநீதவானென்னும் கண்ணியம் அரசாட்சியாரால் அளிக்கப்பட்டதெனக் கேள்வியுற் றுனந்தித்தோம். யாழ்ப்பாணிகள் கண்ணியம்பெறுவ தெமக் கெண்ணில் மகிழ்ச்சியே.

கற்குத்தா சர்வகலாசாலை.—Calcutta Entrance.—கற்குத்தா சர்வகலாசாலையின் பிரவேசபரீட்சை சென்றவாரமும் இவ்வாரமும் நடந்தேறியது யாழ்ப்பாணத்திலிப்பரீட்சைக்குச்சென்றோர் தொகை ௧௨௪. அதன்விபரமாவது:

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணக் | கல்லூரி— | ௬௬ |
| இந்து | " | ௨௬ |
| மத்திய | " | ௧௫ |
| சேன் யோன்ஸ் | " | ௮ |
| பருத்தித்துறை அங்கிலோ வித்தியாசாலை | | |
| வலை | " | ௮ |
| மறுமாணவர் | " | ௨௮ |
| உபாத்திமார் | " | ௨ |
| பெண்கள் | " | ௧ |

இவர்களுட் தென்னிந்தியாவிலிருந்துவந்தார் சிலர். தெல்லிப்பழைப் போதனசாலையிலிருந்தும் இருவராம். கண்டி கொழும்புப்பகுதிகளிலிப்பரீட்சைக்குச் சென்றோர் ௫௦ பேர்வரையிலென்று கேள்வி. வீ. ஏ, எவ், ஏ பரீட்சைகள் பங்குனி முதற் கூற்றில் நடைபெறும்.

சென்னைச் சர்வகலாசாலை.—Madras University.—இச்சர்வகலாசாலையின் எவ். ஏ. பரீட்சைக்குமத்தியகல்லூரியிலிருந்து சென்றோரிருவருஞ் சித்திபெய்தினர்.

பொலீஸ் நீதிபதிகள்.—Police Magistrates.—சாவகச்சேரிக்கும் பருத்தித்துறைக்கும் வெவ்வேறு நீதவான்மாரை நியோகித்துத்தரல்வேண்டுமெனத் தேசாதிபதியிடம் சிலர் விண்ணப்பம்பண்ணியதைக் கண்ட பருத்தித்துறை மிஷனரி கனம் நப் ஐயர்: ஊரிற் தீமைபரம்பாது தடுக்கவேண்டுமேல் நீதவான்மாரை ஓரிடத்தில் நிலையாய்வைத்தல் கூடாதென்றும், அவர்கள் இரண்டு மூன்று வருடத்துக்கொருமுறை மாற்றப்படல்வேண்டுமென்றும், அப்படிச்செய்தாற்றான் அவர்களைப்பற்றி ஊர்ச்சனங்களுக்குப் பயப்பாடிருக்குமென்றும், தலைமைக்காரராயோர் அவர்களோடு பழகிக்கொள்வதினுற் பயமற்று ஊரிற் தீமைபெருகுவதற்கிடமிராதென்றும் ஒப்சேவர் பத்திரிகைக்கோர்கடிதம் விடுத்தனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி.—Mr. C. W. Cathiravet-Pilly.—யாழ்ப்பாணத் தீவுப்பகுதிகளின் ராசாவும் தாதாவுமாகிய மேஸ கதிரவேற்பிள்ளையவர்களதுநாமம் உத்தியோகத்தாலிளைப்பாறவேண்டுமெனத்தீர்க்கப்பட்டோர் நாமங்களுட் குறிக்கப்பட்டிருந்தும், அவரின்னுஞ்சிங்காசனத்திருந்து நீதிவிசாரணைசெய்வது யாழ்ப்பாணிகளெல்லோர்க்கும் விசேஷமாய்த் தீவுப்பகுதியார்க்குக் களிப்புதருங் காட்சி. பெருந்தகைமையும் நிறைகுணமும் நடுவுநிலைமையும்பேரறிவுமுடையவராகியஇவர் இன்னும் பலவருடங்களுக்கவேலைபார்க்கக்கூடிய சக்தியுஞ் சுகமுமுள்ளவராயிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தாரும் தீவுப்பகுதியாரும் பண்ணிய விண்ணப்பங்களுக்குத் தேசாதிபதியவர்கள் செவிகொடுப்பாரென்பது எமது காத்திருப்பு. கிளாட்ஸ்றன் மந்திரியார் எண்பத்தைந்தாம் பராயத்திலும் பிரித்தானியராச்சியகலினங் கைப்பிடித்துக் கேர்ச்சிதமாய் நடத்தினாரன்றோ?

## இலங்கை.

நான்காம் நீதிபதி.—A Fourth Judge to the Supreme Court.—சுப்பிறீங் கோட்டுக்கெழுதப்பட்ட அப்பல் வழக்குகள வருஷக்கணக்காய் விளங்கப்படாதிருத்தலால் ஊரிலுண்டாகும் முறைப்பாடுகள்மெத்த. நீதபதிகள் மூவரோடு இன்னுமொருவர் தேவையெனச் சீவோட்டநீதிபதி சேர் பொன்சர் கேட்டிருக்கிறாகையால் அப்படியொர் நியமனமுண்டாகுமென நம்புதற்கிடமுண்டு. சீவோட்டநீதிபதியின் கேள்வி அங்கீகாரம்பெறுங்கால் நியமனம் யாருக்காகுமோ? சொலிசிற்றர் ஜெனரல் இராமனாதன், கொழும்பு டிஸ்திறிக் நீதவான் பிறவுன் என்னுமிருவரிலொருவர்க்காகுமென்பது சிலர்கருத்து. பிறவுன் நீதவானே சுப்பிரீங்கோட்டில் மிகுதியும் பிரதிநிதனுய் வேலைபார்த்தவருகின்றார். கண்டி டிஸ்திறிக்நீதவான் டீசோசாவும் உத்தரவில் இங்கிலந்து நோக்கத் துரிதப்படுகின்றார். நான்காம் நீதிபதித்துவமும் மனதிலிருக்கலாம். அவ்வேலைக்குரித்தாளி யவரேயென்றார் சிலர்.

தமிழ்ப் பிரதிநிதி.—The Tamil Member.—கௌரவ குமாரசாமியவர்கள் சமுசார சகிதராய் இங்கிலந்துசென்றனர். மூன்று மாதத்துட் திரும்புவாரென்று சத்தம். இராணியின் நீடிய அரசுக்கொண்டாட்ட காலமாதலால் இராசமானியப்பட்டங்களை மனதிலெண்ணினர்போலும்.

அயரத வீதி.—Railway Question.—அயரசவீதிக்காரியஸ்தரின் முடிபென்ன எனச் சட்டநிருபணசபையிற் கேள்விகிளம்ப மாப்பிடும்படி இஞ்சினீர்மார் நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்களுடையமதிப்பைக் கண்டபின்பே காரியஸதரின் தீர்ப்பு வெளிப்படுமெனக் கௌரவ சான்டேஷதுரை விடையளித்தனர். அளவைக்காரரால் மதிப்பெடுக்கப்படும் பாதைகள் களனிப்பள்ளத்தாக்கின் வீதியும், குருநாகலிலிருந்து வடக்குநோக்கும் வீதியுமே. இந்த ௴ கா ௩௨ வரையிற் காரியஸதரின் முடிபவெளியாகுமாம். அதன்பின்னரே யாழ்ப்பாண அயரத வீதியைப்பற்றித்தேசாதிபதியின் தீர்ப்புப்புறப்படும்.

பரோஸ் பண்டிதர்.—The Rev Dr. Barrows.—இந்தியாவிற் சமயங்களின் தாரதம்மியத்தின்பேரில் உபந்நியாசங்கள் செய்யும் பரோஸபண்டிதனை இலங்கைக்கும் அழைக்கும்படி கொழும்பிற் கூடிய மிஷனரிசங்கத்தார் தீர்மானஞ்செய்தனர்.

நேவில் துரை.—Mr. Neville.—இங்கிலந்து செல்லும் நோக்கமாய் மட்டுக்கழப்பிலிருந்து கொழும்புசென்ற நேவில்துரை நோய்வாய்ப்பட்டுக் கொழும்பு ஆஸ்பத்திரியிற் கிடக்கின்றனர்.

கோதாரி.—Cholera.—சிலகாலமாய்க் கொழும்பிலுண்டாயிருக்குமிந்நோய் மும்முரம்பண்ணாதிருந்தும் நாளுக்குநாட் தலைகாட்டி ஒன்றிரண்டுபேருக்குண்டாகிச் சிலரைப்பலியெடுக்கின்றது. நெடுங்காலப்பட்ட வழக்கொன்றிற் சம்பந்தப்பட்டவரான சடையப்பச் செட்டியாரையும் வழக்குமுடிவாகுமுன் வாரியிற்போட்டுவிட்டது. முதனாள் வழக்குக்காயத்தங்கள்பண்ணிய இவர்க்கு மற்றநாள் வழக்குத்தீர்ப்போடு காலன்தீர்ப்புமாயிற்று.

## வடதேசம்.

மில்லர்பண்டிதர்.—Illness of Dr. Miller.—சென்னைக் கிறிஸ்த கல்லூரின் தலைவரும் சட்டநிருபணசங்கத்திற் சர்வகலாசாலையின் பிரதிநிதியுமாகிய கௌரவ மில்லர் பண்டிதர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றனர். டக்தர் பிறவுன் ஆதியோர் அதிக கவனமாய் வைத்தியம் நடத்துகின்றனராம்.

வைசூரி.—Small Pox.—கற்குத்தாவில்வைசூரிநோயுண்டாய்க் கலக்கடிபண்ணுகின்றது. பஞ்சமொருபுறம் பியுபோனிக்கொள்ளைநோய் மறுபுறம், இவற்றுடன் வைசூரியும் பரம்பினுல் இந்தியாவின்பாடென்னதுமோ? கற்குத்தாவிற் கூலிச்சனங்கள் பால்கட்டுவிததற்கொருப்படாமல் யுத்தசன்னத்தராக, அரசாட்சி டாக்குத்தர் பொலீசுவீர

ரோடு சென்று பலவந்தமாய்ப் பால்வைத்தனர். டாக்தத்தர்மார் சிலர்க்குக் கல்லெறிக்காயங்களாக அவர்களேறிச்சென்ற வண்டிலுமுடைக்கப்பட்டது. அம்மைப்பால் பன்றியிலிருந்தெடுக்கப்படுகிறதென மகமதீயரும், பசுவிலிருந்தெடுக்கப்படுகிறதென இந்துக்களும் எண்ணிக்கொண்டு, அந்தப்பால் தங்கள் தேகத்திற் படுகிறதினுற் தமசாதிக்குப் பங்கம்வருமென எதிர்க்கிறார்களாம.

பஞ்சஉதவிப்பணம்.-The Famine Fund.—இந்தியாவின் பஞ்சஉதவிக்காக லந்தோம்நகராதிகாரப் பிரபு சேர்க்குந்தொகை வரவர உயருகின்றது. கற்குத்தாவுக்கு ஓரிலட்சம்பவுணனுப்பியிருக்கிறார். முழுத்தொகை லட்சத்தைம்பதினுயிரம் பவுண்வரையிலாயிற்று. சென்றமாதம் கற்கத்தா நகரியில் பிரசாவலர்நடத்தியகூட்டத்திலும் இந்நோக்கத்திற்காக லட்சம் ரூபாவுக்குமேற்படச் சேர்ந்தது.

குக்லி ஆறு.— The River Hoogly — இவ்வாற்றின் பக்கத்துள்ளமண்குன்றுகள் இடிந்து படிப்படியாய் ஆற்றைநிரப்புவதால் அதன்மேலோடுங்கப்பல்கள் நிலத்திற் பொறுத்து விலங்கப்படுகின்றன.

கொள்ளைநோய்.-Pubonic Plague.—இந்நூதனநோய் அதிமும்பாய்கொண்டு மேற்கிந்தியாவெங்கும் பரவுகின்றது. அங்கிலேயர் சிலரைப் பின்னும் வாரியெடுத்தது. ஒவ்வொருநாளும் சராசரி நூற்றுக்குமேற்பட்டோர் மரிக்கின்றனர். பூனவில் மிக உக்கிரங்காட்டுகின்றது. சென்னபட்டினப்பகுதிகளிலுமிந்நோய் காணப்பட்டிருக்கிறதென அங்குமிங்குங் கதைநடக்கின்றது. இந்தியாமுழுவதையும் சுற்றி வாரியள்ளப்போகிறதோவெனப்பலரும் யோசிக்கின்றனர். ஐரோப்பாவின் ஒவ்வொருதேசத்திலும், இந்தியாவிலிருந்து விசேஷமாய் வம்பாய்ப் பகுதிகளிலிருந்து போகுங் கப்பல்களைத் தடைபண்ணி மிக்க ஆராய்வோடேயே சாமான்களையும் ஆட்களையுமிறக்குகின்றனர்- ஐரோப்பியராச்சியங்களெல்லாஞ் சேர்ந்து இந்நோய் அத்தேசங்களிற்பரம்பாதபடிக்கான எத்தனங்களை யோசிக்கும்பொருட்டு இத்தாலியிலுள்ள வெனிஸ்பட்டினத்திலே ஓர் ஆலோசனைக்கூட்டம்வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## பிறதேசம்.

இராணியின் பிரசாரணம்.-The Queen's Speech. பிரித்தானிய பாளிமேந்துச் சங்கத்தின் இவ்வருஷ முதற்கூட்டம் சென்றமாதம் ௧௯ந் தேதி ஆரம்பமாயது. லோட்சான்சலரால் இராணியின் பிரசாரணம் வாசிக்கப்பட்டது. அதில் இராணிநாயகியார் பிரித்தன் இராச்சியத்துக்கும், மற்றும் இராச்சியங்களுக்குமிடையிற் தற்போது சமாதானப்போக்கிருப்பதாகவும், கொன்ஸதந்திநேப்பிள்புரியிலும், துருக்கையின் மற்றும்பகுதிகளிலும் நடந்த நிஷ்டூரங்கள் எல்லா அதிபதிகளையும் அருட்டியிருக்கின்றனவென்றும், துருக்கை விஷயத்தில் பிரராசாங்கதாளுபதிகளெல்லோரு மாலோசனைசெய்கிறார்களென்றும், வெனிசூலா விஷயத்தில் ஐக்கியமாகாணத்துடன் செய்துகொண்ட மத்தியஸ்தத் தீர்ப்புப் பிரசைகளின் நன்மைக்கானதென்றும், ஐக்கியமாகாணத்தோடு தமக்குண்டாகும் பிணக்குகளைத் தீர்ப்பதற்காகப் பொதுமத்தியஸ்தரை நியமித்தது வீணில் யுத்தம துவங்காமலிருத்தற்கேதுவென்றும், இந்தியாவிற் பஞ்சமுண்டாயிருப்பது தமக்குக் கவலையென்றும், அயரதவீதி நீர்ப்பாய்ச்சலாதிய ஏதுக்களாற் பஞ்சத்தைக் குறைப்பதற்கான எத்தனங்கள் அரசாட்சியாரால் செய்யப்படுகின்றனவென்றும், இந்தியாவின் கொள்ளைநோயைத் தடுப்பதற்காய்க கூடிய பிரயத்தனங்களெல்லாஞ் செய்யும்படி கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், பிரித்தானிய ராச்சியத்தைக் காப்பதற்கானவல்லாஏற்பாடுகளும் நடைபெறுமென்றும் விளம்பினர்.

மந்திரியின் பிரசாரணம்.—The Premiers Speech பிரபுக்கள் சபையில் இராணியின் பேச்சை அங்கீகாரஞ் செய்தபோது மந்திரி லோட் சலிஸபரியெழுந்து, ஆளுகையிற் திருத்தங்கள் செய்யும்படி சுலுத்தானை நெருக்கவேண்டுமென எல்லா இராச்சியபதிகளு மொப்புக்கொள்ளினும் அதைத் தாமதப்படுத்தவதிற் சிலருக்குள் வித்தியாசமான எண்ணங்களிருக்கின்றனவென்றும், விசேஷசீர்திருத்தங்கள் செய்தாலன்றிச் சுலுத்தானின் இராச்சியம் சீக்கிரம் முடிவுக்கு வருமென்றும் எகிப்தின் தென்பக்கத்துள்ள டொங்கோலாவைப்பிடித்திருப்பது, அது காட்டூம் என்னுமிடத்துக்குச் செல்லும் வழியாகையாலென்றும் ஐக்கிய தேசத்தவர்களுடன் செய்திருக்கும் மத்தியஸ்தருடன்படிக்கை யுத்தங்கள் வீணிற் துவங்காதபடி தடுப்பதேயன்றி, அவர்களுடன் ஒருபோதும் யுத்தஞ்செய்யாதபடி விலக்குவதனறென்றுங் கூறினர்.

டேவிஷர்க் கெதிர்செலல்.—Expedition Against the Dervishes—வட ஆபிரிக்காவின் மத்தியிற் பதுங்கியிருந்து இடைக்கிடை கலக்கடிகள்செய்யும் டேவிஷர்க்கெதிராய் அங்கிலோ இத்தாலியர் சேர்ந்து சேனையனுப்பயோசிக்கின்றனர்

ஸபானியர்க்குப்புத்திகூறல்.—Advice to Spain. மெக்கின்லியென்பவர் ஐக்கியதேசப்பிரசாதிபதித்துவங்கையேற்குமுன் கியூபதீவாரோடு சமாதானமாகிவிடுங்களென ஸ்பானியர்க்குப் பிரான்சியர் நெருக்கிப் புத்திகூறுகின்றனர்.

பிலிப்பையின்தீவுக் கலகம்.-Phillipines Revolt. பிலிப்பையின் தீவுக் கலகத்தையடக்கும்படி சென்ற ஸ்பானிய சேனைக்குமுன் கலகக்காரரில் ௫,000 பேரடங்கிய கூட்டத்தவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களில் ௪,௧00 பேர் கொல்லப்பட, பெருந்தொகையானோர் கைதிகளாயினர். ஸ்பானியரில் ௨௫ பேர் மாத்திரம் மாண்டனர் யாப்பானியர் இரகசியத்திற் கலகக்காரருக்குப் போர்முஸ்தீதுகள் கொடுத்துதவிபண்ணியதோடு பிலிப்பையின்தீவார் முழுப்பேரும் ஸபானியர்க்கு விரோதமாயெழும்பினுற் தாமும் உதவிசெய்வதாகச் சொல்லியிருக்கிறார்களென்று கைதிகளான கலகக்காரர் வெளிவிட்டனராம்.

சந்தான வெறுப்பு.—Dislike of Offsprings.—பிரான்சியர் பொதுவாய் மகப்பேற்றிற் பிரியமற்றவர்களாய் அதைத் தடுத்தற்கேற்ற பலவகைப்பெத்தனங்களையும் கையாடுபவர்களாம். ஆகையினுலே அத்தேசக் குடிசனங்களில் ஐந்திலொருபங்குபேருஞ் சந்தானமற்றவர்களாயிருக்கின்றனராம். சந்தானமில்லாதிருத்தலே மிகுதியானோர் விருப்பமாம். "கல்லாமழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்-சொல்லாலுருக்கி யழுதோடித் தொடர்ந்துபற்றி மல்லார்புயத்து விளையாடுமகிழ்ச்சிமைந்த-ரில்லாதவர்க்கு மனைவாழ்வினினிமையென்னும்" என வில்லிபுத்தூரனும் "குழலினிது யாழினிதென்பதம்மக்கள்-மழலைச்சொற் கேளாதவர்" எனத் திருவள்ளுவனும் "பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற்றென்னுடையரேனுமுடையரோ-இன்னடிசில்-புக்களையுந்தாமரைக்கைப் பூநாறுஞ்செய்யவாய்-மக்களையிங்கில்லாதவர்" எனப் புகழேந்தியுங் கூறுவது இவர்விஷயத்திற் பொய்ப்படுகின்றதே. பிரான்சுதேசத்தில் மனுஷிகமில்வளவாய் மறுதலைப்படுவதாகு அத்தேயத்தவர்க்குள் உண்மையான தெய்வபயமும் சன்மார்க்கநெறிக் கட்டுப்பாடும் சீரிபலிவாக ஒழுங்குச்சட்டங்களுமில்லாதிருத்தலும், விவாகமாதர் சகவாசத்தைத் தைரியப்படுத்தமொழுங்குகளும் சீதன வழக்கங்களு மிருத்தலுமே காரணங்களாம்.

இந்து ஐரோப்பிய அயரதவீதி.—Indo-European Railway.—ருஷியர் ஐரோப்பாவிலிருந்து சைபீரியாவுக்கூடாய் சீனராச்சியத்துக்குள் அயரதவீதிதிறப்பதைக்கண்டாக்கும் மத்தித்தரைக்கடலிலிருந்து அரேபியா, பார்சியா, பெலூக்கிஸதான், தேசங்களுக்கூடாய் இந்தியாவிற் குருச்சிபட்டினம்வரைக்கும் அயரதவீதி போடுவதைப்பற்றி மறுபடியும் அருட்சிநடக்கின்றது. இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குச்செல்லுங்காலம் இப்பாதையால் ஏழுநாட் சுருங்குமாம், லந்தோம்பட்டினத்து றைம்ஸ்பத்திரிகை இது வாய்ப்பானதெப்பல்லவெனக் கூறுகின்றது.

எண்பத்தேழாஞ்சேனனதினம்.-- The Eighty Seventh Birthday —கிளாட்ஸ்ரோன் மந்திரியார் தமது எண்பத்தேழாஞ்சேனனதினத்தை கவடேன் கோட்டையில் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு கொண்டாடினர். அன்று காலமே இருநூறு வாழ்த்துக்கடிதங்கள் காவலைத்தவாலிலிருந்தன. நாள்முழுவதுந் தவால்களும் தந்திச்செய்திகளும் வந்தகொண்டேயிருந்தன. உவேலஸ்இளவரசரும், இளவரசியுமே முதல் வாழ்த்தனுப்பினர். அன்றுமுழுதமக்கிராமத்தின் கோபுரமணிகள் சந்தோஷசத்தமிட, கிராமம் முழுவதும் அவர்க்குக் கண்ணியமாய் அலங்கரிக்கப்பட்டது. சாயங்காலத்திற் தேவாலயஞ்சென்று ஆராதனைசெய்தனர், மந்திரியார் இன்னும் நல்ல தேகபலமும், தைரியமும், வைதீக, லௌகீக விஷயங்களிலதிக முயற்சியுமுடையராயிருக்கின்றனர்.

## கடிதம்.

பிரதியுத்தரம்.—Answer to Correspondents.--"இதற்கென்னசொல்லுகிறீர்" அவசியமற்றதென நிறுத்தினோம். கடிதங்கள் வட்டுக்கோட்டைக்குத் தமிழ்ப்பத்திராதிபர்க்கனுப்பப்படல்வேண்டும். கடிதக்காரரபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர்உத்தரவாதியல்லர். உத. பத்.

## விவேகானந்தசுவாமியின் அவிவேக சாலப் பிரசாரணம்.

அமரிக்காவிலே சிக்காக்கோ நகரியிலே கூடிய சர்வசமயசபாசங்கத்துக்கு இந்துசமய பிரதிஸ்தராய்ச் சென்ற விவேகானந்தசுவாமி இந்தியாவிலே விளங்கும், வேதம், வேதாக்கம், உபநிடதம், ஆகமம், சித்தாந்தம், பௌராணிகம், வைஷ்ணவம், ஆருகதம், பௌத்தம், ஆரியசமாசம், பிரமசமாசம் முதலிய பல பேதங்களாய்ப் பிரிந்து, ஒன்றற்கொன்று விபரீதமாய்ப்போதிக்கும் இந்துமதங்களின் விவிதபோதனைகளையும், இத்தேசத்திற் பல்லோரால் சாதிக்கப்படும் விவிதசாதனைகளையு முள்ளவாறுகாட்டாது மறைத்து, தாம் பெற்ற கிறிஸ்தபோதனைக்கேற்ப உண்டாக்கிய நவ இந்துமத பிரசாரணஞ்செய்து அமரிக்காதியோர்க்குச் சாலங்காட்டியதமையாது இந்நாட்களில் ஈண்டுதித்துக் கொழும்பு யாழ்ப்பாணமாதிய இடங்களிலும் அவ்வகை விபரீதசாலப் பிரசாரணங் கூறலுற்றார். இந்துமத கிறிஸதமத யதார்த்ததன்மைகளையுணராதார் அவர் சாலங்களில் மயங்காவண்ணம் அவர் கூற்று நிராதார வசத்திய போலிசாலம் மாத்திரையே அன்றி உண்மைப்பொருள் அன்றெனக் காட்டுவாம்.

1. மேலைத்தேசங்களிலுள்ளார் மார்க்கநிலையறியாரெனவும், மார்க்கநிலையற்றாரும் பத்திநெறியற்றோரெனவுஞ் சாலம்விடுகின்றார், கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களையும், இலட்சக்கணக்கான கிறிஸ்த ஆலயங்களையும், ஆயிரக்கணக்கான கிறிஸ்த கல்லூரிகள் வேதசாத்திரசாலைகளையும், உலகம் எங்கும் அஞ்ஞானந்தகாரத்தில் அமிழ்ந்திவருந்தும் ஆன்மகோடிகளுக்குச் சரீர ஆத்தும நன்மைகளைக் கைமாறுகருதாது பொழியும் நூற்றுக்கணக்கான சங்கங்களையுமடக்கிய அவ்விடங்களில், சுத்தசத்திய வேதத்தை அனுதினம் அத்தியயனம்பண்ணி இரட்சகர்திருவடியை அனுசந்தானம்பண்ணுவதினுல் வாய்மையும், தாய்மையும், நீதியும், நிறையும், அன்பும் பொறையும் நிறைந்து, கிறிஸ்த பத்திமேலீட்டினுல் தங்கள் உடல் பொருள் ஆவியாவற்றையும் பரித்தியாகம்பண்ணும் அத்தேசவாசிகள் அங்கும் இங்கும் எங்கும் பிரத்தியட்சமாய் விளங்கவும், இவ்வுண்மையை மறைத்துச் சுவாமிகூறுங் கூற்றுச் சூரியனைச் சுண்டுவிரலால் மறைக்கத்தணிந்தவன் சூழ்ச்சியிலும் மாசூழ்ச்சிதான். ஆங்கு நிரீச்சுரவாதிகளாய் அமரர்க்கராய்த் துன்மார்க்கராய்ச் சிலருளரேனும் அனேகர் மார்க்கநிலையற்றோர் எனக் கூறுதல் மித்தியமன்றோ? அங்ஙனங்கூறினும் அவரைத் தோகைப்படுத்திக் கூறின தம் சாலம் வெளிப்படுமென்றே பொதுஅடியில் தாம் கண்ட பலர் என்கிறார். இது அதிவிவேகசாலந்தான்!!!

2. அவர்களில் அனேகர் இந்துமதத்தை ஆராய்கின்றனரென்றும், அப்படியாராய்வுசெய்வாரில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பதபேரும் இந்துமதமே மெய்மதமெனக் கொள்ளுகின்றனரென்றும், பெரும் சாலம்விடுகிறார். அங்கிள சம்ஸகிருத பாஷைகளில் பாண்டித்தியமடைந்த பரதகண்டச்சமயபேதங்களை நன்குகற்று, கரந்துறைந்த இந்துவேத வேதாங்க உபநிடதங்களாகியவற்றை யாராய்ந்து, யாவர்க்குந் தெளிபொருளாக வெளிப்படுத்திய Wilson, Max. Muller. Monier Williams. Muir, Cowell, Lassen, Roth Weber, Haug, Barth, Whitney, இக்ஞோன்னோர் யாவரும் இந்தசமயிகளாய்விட்டனரா? இந்துமத ஆராய்ச்சியில் வல்லுநரான இவர்கள் இந்தசமயிகளாகாவிடில் பின் ஆனோர் யாவரோ? இந்துசமய நூலுணர்ச்சியும் கிறிஸ்தசமயவுணர்ச்சியுமில்லாது சுவாமி பின் திரிவாரை நிகர்த்தவர்களோ? அஃதிருக்க, முன்னர்க் கூறிய சர்வசமய சபாநாயகமாயிருந்து சுவாமியின் இந்துமத பிரசாரணங் கேட்டும் அத்துடன் பல மதங்களையும் நன்கு ஆராய்ந்து இப்பொழுது கற்கத்தாவில் வந்து இந்துசமய விரோதமாயுங் கிறிஸ்தமத ஸதாபனமாயும் பிரசாரணம்புரியும் Dr. Barrows உம் இவர் கழித்தவிட்டவர்களிலொருவராக்கும். சுவாமியின் சாலம் இந்திரசாலத்தையும் வென்றுவிட்டதே!!

3. இந்துமதத்தினின்றே சர்வமதங்களுமுற்பத்தியாயினவென்றும், இந்துக்களே ஆவிக்குரிய மார்க்கமுடையார் என்றுஞ் சாலம்விடுகிறார். பரதகண்ட எல்லைக்குட்பட்டுக் கிரியாங்க தவளூஷ்டு, நிர்வாணதீட்சை இருவினையொப்புடையார்க்கே யுரிமைகொண்டு பிறர் அறியப்பெறாது மறைந்திருந்த இந்துமதம் இந்தக்காலவிதிகளையெல்லாங் கடந்து பிறமதங்களுக்கு உற்பத்திக்காரணமானது அதிநூதனமே. அதிலும், பதி, ஆன்மா, பாவம், இரட்சணியம், முத்தியாகிய விசேஷகாரியங்களில் இந்துமத கொள்கைக்குமுற்றும் மாறுய்க் கூறும் கிறிஸ்துமதம் அதனுற்பத்திக்குசகாயம்பெற்றதெங்ஙன்? சரிதை கிரியைகளிலுழன்று விக்கிரகவணக்கம்புரிந்து, பாரணபடனஞ்செய்து, தேர்த்திருவிழா, கொட்டுமுழக்குடன் வெண்ணீறுபூசுவார் ஆவிக்குரிய மார்க்கமுடையராம். சுத்த சுயம்பிரகாசமான கர்த்தனைப் பத்திமேலீட்டினுல் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்குங் கிறிஸ்தமதம் ஆவிக்குரியதல்லவெனச் சொல்லாம்ற்சொல்லுகிறார். பட்டப்பகலையிரவெனக்கூறுதல் சுவாமிக்குவந்த சாலமா?

4. இந்துமார்க்கம் பரசமயிகளுடன் அனுதாபப்படவும், எந்த மார்க்கத்தையும் விரோதியாது சமய இட்டங்கொடுக்கவும் ஏவுகிறதென்றும், மற்றமதங்கள்போல அக்கினிவாள்முதலியவற்றின் சகாய உபாயத்தால் வளர்ச்சியடையவில்லையென்றும், பொய்கைவாய்ச்சி பொரிமாலை மெய்ச்சியவகையாய்ப் பேசுகிறார். இந்துசமய பேதங்களாகிய சைவ, வைஷ்ணவ, ஆருகத, பௌத்த சமயங்களும் அவற்றின் உட்சமயங்களும் ஒன்றோடொன்று சறுமியுறுமிச் சீறிச்சினந்து வாது வல்யுத்தம்புரிந்து கழுவேற்றி அக்கினிதானம்பண்ணி இவ்வாறு மதாபிமானத்தால் பரதகண்டமெங்கும் சமரபூமியாயிருந்ததை உற்று நோக்காமல் இந்துமதம் சமயஇட்டங்கொடுக்கிறது அனுதாபமுண்டாக்குகிறது என இதிகாச தோஷஞ் சாற்றி இந்திரசாலம்விடல் சுவாமிக்கழகா? இந்தியாவிற் தற்போது விளங்கும் சமயஇட்டம் இந்துமதமாண்போ கிறிஸதமத மாண்போ? சுவாமி சென்ற மேலைத்தேசங்களில் மரியாதையோடு உபசரிப்பும் பணமும்பெற்று மீண்டதும் அங்குள்ள இந்துமதமேன்மைதான்! நன்று நன்று! அமரிக்க கிறிஸ்தமதம், மாணிக்கவாசகசுவாமி காலச் சைவமாயிருப்பின் சுவாமி அங்கு பிரசங்கிக்கவும் பின்னர் திரும்பிவரவும் விடுவரா? கழுவேற்றிவிடுவாரோ! சமயஇட்டங்கொடுப்பதும், பரமத வேறுபாடின்றிச் சகலரிலும் அனுதாபப்படச்செய்வதும் கிறிஸ்துமதமேயென்பதை அனுபவமாத்திலையாய்ப் பூரணமாயறிந்தும் இவ்வாறு போலிசாலம் விடல் அவர்க்கு விவேகமாகுமா?

5 இந்துமதம் யாவரையுங் கவருங் கவர்ச்சியுள்ளதென்கிறார். தான்கிடப்பது குட்டிச்சுவர் கனக்காண்பது மச்சுமாளிகையென்றவாறே இச்சாலம் இருக்கிறது. இந்துமத கவர்ச்சிவலியினுல் அது எவ்வெத்தேசத்தாரைத் தன்பாலிழுத்தது. இது தன் கவர்ச்சித்திறனைப் பூமியின் எப்பாகங்களில் செலுத்தி எவ்வெத்தேசத்தாரைச் சாதியாரைப் பாஷைக்காரரைப் பண்டிதர்பாமரரை யிழுத்து இந்துசமயத்தில் புகச்செய்தது. பிறதேசத்தில் அதன் கவர்ச்சித்திறன் செல்லாவிடினும் இந்துதேசத்திலேயே இந்துமதம் பரவும் மகிமைய கிறிஸ்தசமயங்கள் வேரூன்றிப் பலரையிழுக்கவும்வந்ததேதினுல்? இந்துமதமோ கிறிஸதமதமோ எது உலகெங்குஞ்சென்று யாவரையுந் தன்பாலிழுக்கிறது? ஆகையால் யாவரையுங் கவருங் கவர்ச்சி இந்துமதத்துக்கன்று, கிறிஸ்தமதத்துக்கேயுரிய மாண்பு எனல் பிரத்தியட்சமாம். புத்தியுடையவர்போலிருந்தும் இன்ன போலிசாலங்களால் உலகைமயக்குதல் சுவாமிக்கும் அவர்சீஷருக்கும் விவேகமாகாது. (இன்னும்வரும்.)

இங்ஙனம், சத்தியநேசன்.

## விவேகானந்தசுவாமி.

அங்கே அமெரிக்கா இங்கிலந்திலும். இங்கே இலங்கை யாழ்ப்பாணத்திலும், விவேகானந்தசுவாமி சமயோபதேசஞ்செய்தல் எம் நாட்டில் பாடியோடி விளையாடுவோர் இருபட்சமாய், ஒருபட்சத்தார் வரிசைபெறநிற்க, மறுபட்சத்தொருவன்வந்து, அச்சம்பக்கம் போய்கதுளிந்து கைகளையூன்றி, மண்ணள்ளிக்கசக்கித் தன்னைப்பிடிக்கச்சொல்லி ஓடுதல்போன்றிருக்கின்றது. மேலைத்தேசங்களில் விவேகானந்தசுவாமி பிரசங்கித்தமார்க்கத்திற்கு ஆதாரமாயுள்ள நூல்கள் எவையென்றும், அவைகளில் விசேடித்துக்கூறப்பட்டுள்ள கடவுள் எவரென்றும் அறிதல் அவரை ஏற்றுபசரித்தார்க்கும்அவ்வழிச்செல்வோர்க்கும் அதிநன்மைபயக்குமே. அவ்விதநூல்கள் மனுக்குலத்தோர்க்குபயோகமாக இருப்பதுமல்லாமல் ஏற்றத்தாழ்ச்சியின்றி எவரிடத்தும் இருத்தலும் அவசியமே. "எட்டிஎட்டிப்பார்ப்பாரும் ஏணிவைத்துப் பார்ப்பாரும் குட்டிச்சுவராலே குனிந்துநின்றுபார்ப்பாரும்" என்றுற்போல நம் யாழ்ப்பாணத்துள்ள சைவரும்பிறரும்விவேகானந்தசுவாமியை வலிந்தழைத்தும் எட்டிப்பார்த்தும் வணங்கிப்பார்த்தும் பெற்றுக்கொண்ட நற்பலன்தானென்ன? விவேகானந்தசுவாமி போதிக்கின்ற மதத்துக்கும் அவரதாசாரத்துக்கும் யாழ்ப்பாணத்துள்ளசைவர் அநுசரிக்கின்ற மார்க்க ஒழுக்கங்களுக்கும் ஏதும் ஒற்றுமையுற்றுமா? முத்திறத்தார்க்கே விசேஷ சலாக்கியமும் பாக்கியமுமாகச் சமைந்துள்ள ஆலயங்களும் நூல்களும் எத்திறத்தார்க்கும் இயைதற்குகந்தவிதி உபதேசத்தால் மாற்றினுல் வாய்ப்புத்தான்.

சிறுபிள்ளைகள் விளையாட்டுள் ஒன்றில் ஒருபிள்ளை இன்னெருபிள்ளையடைய இருகண்களையும் தனது இருகைகளாலும் பொத்திக்கொண்டு, விளையாடச்சேர்ந்த மறுபிள்ளைகளை ஓடி ஒளிக்கச்சொல்லி, கண்கள் பொத்தப்பட்டவனுக்குச் சொல்லிக்கொடுத்துச் சொல்லச்செய்வது "கண்ணுறே கடையாறே" என்பனவாம். அவன் முன் ஓடிமறைந்தவர்களில் ஒருவனையும் தொடாவிட்டால் பழையபடியே மறுபடியுங் கண்பொத்தி விடப்படுவான், அத்தன்மைத்தாய்ச் சொன்னதைக்கேட்டுத் துள்ளிமிதிக்கும் நம்மவர்கள் பின்னும் முந்தினவிதம் செய்வதானுல் விவேகானந்தசுவாமி வருதலும் பிரசங்கஞ் செய்தலும் பயன்பெற்றிலவே.

மனம்வேறு செயல்வேறு சொல்வேறு இல்லாதபடி அகச்சாட்சிக்குமாறின்றிச் செய்வதும் சொல்வதும் வியக்கற்பாற்று. பரமசற்குருவாகிய உலகரட்சகரின் போதனையைச் சிரபூஷணமாக்கி அவரதடியார், உலகெங்கும் அக்கியானதிமிரத்தை அடியறச்செய்யுஞ் சுவிசேஷ ஒளியைப்பிரசங்கித்து வந்தனர், வருகின்றனர். அச்சுவிசேஷ ஒளி எத்தனை தேசங்களை எத்தனை சாதிகளை எத்தனை கடுமுரடான இருதயமுள்ளவர்களைச் சன்மார்க்க தெய்வபத்தி அன்பாதிய சுகுணங்களால் நிறையச் செய்தது. அதோடெதிர்க்க மனுஷரால் முடியாது.

ஓர் வேதன்.

## THE SWAMY?

It seems like blasphemy to use this word, but seeing that Mr. Dutt wishes to be called by it we will not quarrel about a name. It is however only properly applicable to the divine self-existent One, possessing *swampu*. But this man arrogates to himself not only the name but the attributes of Deity. When his pretentions are such we need not be surprised at any thing he says or does. It is a little amusing however to hear him boasting of the antiquity of his so-called religion, as if antiquity were an excellence. The older any thing is the more likely it is to be worn-out, or unsuited to the present. The Swamy's own experience furnishes a neat little parable, which will serve to point a moral, as well as adorn a tale. When he and his retinue started up the central road, his boasted fondness for the antique must necessarily come into play, and neglecting the new improved coach line run by "children of yesterday, "they took the old one, with the result that might have been expected, they broke down, both fore wheel and hind wheel, and had to take a bullock cart to the sacred city. This we consider quite prophetic, and we do not hesitate to confidently predict that his attempt to ride the worn out *vahanam* of Vedantism will likewise result in a complete break-down, both fore and aft. In fact the wabbling of the conveyance is even now plainly visible. Some may say that in spite of his break down he got safely through to the city, but we reply with the old saw that "you must not try to make a parable go on all fours." Certainly the old coach did not go on all four. And a parable is only intended to apply in certain points. Nevertheless we hope that the swamy may come out all right in the end even if this hybrid philosophy he calls a religion does utterly collapse, and have to be left behind. This same preacher of Hinduism while in America said in a public lecture; "We want missionaries of Christ. Let such come to India, by the hundreds and thousands, and live Christ's life to us, and let it permeate the very core of society. Let Him be preached in every village and corner of India." If he was sincere in saying this why does he exalt Hinduism as so much superior. Hinduism is already in every corner of India, and what is the result. The people do not attempt to be better than they believe their Gods to be. If he thinks there would be benefit in having the life of Christ preached in every corner of India, then by his own confession Hinduism is not superior. The only alternative is to think he did not mean what he said.

In Colombo he said that India is "the land where humanity has attained its highest towards gentleness, towards generosity, towards purity, towards calmness" But certainly no one can dispute that these qualities reached their highest point in Jesus of Nazareth in the land of Palestine. Perhaps he referred to the people as a whole, though that is not what he said. We may excuse some mistakes in one whose vernacular is not English. Yet even that meaning we would dispute.

We would dispute most decidedly his description of the state of religion "in England or America or France or Germany." The 'ploughman' there may not make as much parade of his religion by ceremonies and having it "marked on his forehead," but it has more effect on his life, at least in the two former countries. A religion that pervades by an unseen but powerful influence the whole life, and elevates the moral character, as there, is certainly superior to one which has no personal God, like Mr. Dutt's, and fellowships or even encourages the most degrading immorality in its so-called worship and temples. What he calls the most wonderful and marvelous harmony of "various apparently hopelessly contradictory" sects, in India is only the indifference of uncertainty. Truth, whether religious or scientific, is never indifferent. It will not persecute, but it will have no fellowship with untruth.

He is proud to quote the German Schopenhauer, but that would-be philosopher turned against his associates, and even against his teachers, because they were successful, and he could get but a few students. He became bitterly pessimistic, and declared that this world is the worst possible world, that man is most happy when unconscious, and most miserable when most conscious. If any wish to fellowship with such misanthropists they are welcome. But they find no great following in Europe.

The lecturer misrepresented the names of deities, and if he did it in ignorance it does not do him much credit for his learning. What people or race ever worshipped "Moloch Yavah" The Jews received a revelation from Yaveh, commonly called Jehovah, and many of them fell away from his worship and followed Moloch, but we have not heard that they ever identified the two.

He ended his lecture in Colombo by saying that there is one lesson which is to be preached by India, and by India alone, and that is "the one lesson of mildness, gentleness, forbearance, toleration, sympathy, and brotherhood." Christ taught "all ye are brethren." But let a tree-climber only enter a Hindu temple, and how long should we see this gentleness, toleration and brotherhood.

In fine we may say that this boasted apostle is only juggling with words. What he calls a religion is no religion, because it has no personal God, and consequently no personal relation between man and God, which is religion. His philosophy is inconsistent and self-destructive, and contrary to that of the Sivites of Jaffna, while the practice which he advocates is not found generally in India. We propose to discuss his Jaffna lecture at another time if we can find anything to consider.

### THE BLUE BOOK.

In England the books in which the proceedings of the House of Commons are printed together with various statistics and documents of the government are called Blue Books. The name came from the fact that they were customarily bound in blue. Sometimes fifty or sixty thick folio volumes are printed in one session. The Colonies follow the same custom, and Ceylon has its annual Blue Book, with its vast array of facts and figures. The details of Imports and Exports give much interesting information. Kerosine oil imported was about $1\frac{1}{4}$ million gallons of which one fourth came from America and nearly three fourths from Russia. The trade in the latter seems to have begun here in '92, and to have rapidly displaced the American oil, while the total consumption much more than doubled in four years, in spite of the heavy duty, imposed in '93. The natives are getting to use kerosine oil freely, and as the only lamp used by many is an open bottle with a loose wick supported by a piece of tin, the smokiness of the Russian light is no objection, while its greater cheapness is quite a consideration. But the Americans have now brought their price down and after having almost entirely lost the market have recovered one fourth.

The exports to America were for '95 over four million rupees worth, or more than to any other country except Australia and Great Britain. Of this about $2\frac{1}{2}$ was coconut oil, or nearly the same as to Britain. One million was plumbago which is more than any other country takes. The remainder was dessicated coconut, cocoa, cinnamon, coffee, citronella oil, coir, etc. It is not strange that many people think the products of our Island mostly begin with C.

There was a revenue of nearly $2\frac{1}{2}$ million from the production of arrack, rum and toddy, and there was imported about $1\frac{1}{4}$ million rupees worth of wines and liquors, in both cases a considerable increase. There is evidently need of more temperance agitation. The people import nearly a million rupees' worth of curry stuffs from India, and two millions of dried fish from there and the Maldives, one million of wheat, three of paddy, and thirty of rice, or ten rupees worth for every man, woman and child in the Island. Certainly the opening up of the waste lands and producing more of what the people need is very important. It is true that the number engaged in agriculture is eight times that in manufactures or commerce, and a more even proportion will be necessary as the populace rises in civilization. But with better facilities a larger proportion of the food might be raised here without taking a larger part of the populace. Sugar for example is imported to the extent of more than $2\frac{1}{2}$ million rupees, and that too chiefly from India and Honkgong. It might be much better raised here. When the attempt was made some years ago, it was given up because the cane syrup which was produced abundantly could not be made to crystalize. But science ought to be able to meet that difficulty now. Also 407,000 oxen and bulls were imported mostly from India, and nearly as many sheep and lambs.

If the use of soap is a measure of the degree of civilization of any people, as some say, the Ceylonese must be advancing rapidly, as the increase for the year was about 5.000 cwt. or a total of 14,000 cwt. valued at Rs. 186,000. The Ceylonese regard the umbrella as a sign of authority, and they evidently appreciate the privilege of being able to purchase umbrellas cheaply, seeing that they invest in nearly 200,000 a year. Clocks and watches come in worth Rs. 67,000 a year. Lamps yet more, and sewing machines more than 600. Cheap matches are well appreciated, and it does not pay to go to the neighbor's to borrow some fire, when a whole box, capable of producing fire a hundred times, can be bought for a cent. But they are evidently very wastefully used, as there were about 20 boxes to a family in the whole Island. Of these the nimble fingered Japanese furnish more than half, and their rivals the Chinese most of the remainder. This revolution is only recent and shows the enterprize of our neighbors of the Land of the Rising Sun. China, as might be expected, furnishes the most of Crackers, of which 52,000 Rupees worth are used, showing an Oriental fondness for noise. We are sorry to see also that about 25,000 dozen of playing cards are used up in a year. As the use of these is so generally associated with gambling it indicates a need of reform.

### THE FIRST DECENNIAL CELEBRATION OF THE CHULIPURAM ENGLISH INSTITUTION.

The tenth year celebration of this Institution took place with eclat in the play-grounds of the Institution on Saturday the 30th January. The field sports were conducted from 2 to 5-30 P. M. and Mr. H. H. Cameron, our popular District Judge together with Rev. Yates our Chaplain, arrived on bicycles to witness the sports at about 4 P. M. They were conducted with native music to the play-ground by the Manager Mr. K. Mudeliar Chellappah. The District Judge was highly pleased with the form of our students and their physical development. Cricket, racing, jumping, fencing and tug-of-war were all the items of the field sports The Principal proposed three ringing cheers for the distinguished Judge and the other visitors who were present at the sports, which was loudly responded to by the students.

The celebration commenced precisely at 6 P. M., with T. Chellappah Pillai Esquire B. A., B. L., Retired Chief Justice of the State of Travancore in the chair. The Manager gave a report of the origin and progress of the Institution from the time of its late founder Mr. S. Kanagaratna Mudliar for the last 10 years. The Principal Mr. T. W. Small spoke on the present status and future prospects of the Institution. He said that he has two efficient assistants in the persons of Mr. T. Ekantalingum Pillai B. A. of the Madras University and of Mr. A. Bernard from Colombo.

The next item on the programme was the dramatic entertainment of Oberon and Titania, a Fairy Tale selected and adapted from Shakespear's Midsummer Night's Dream. The First Scene was a wood in Fairyland and the Second Scene was Titania's palace. The acting was considered good by the audience and "Puck" displayed his well-known vigor in putting a girdle round about the earth in 40 minutes.

The Chairman made a few closing remarks and eulogised the efforts both of the Manager and of the Principal, the former in his arduous exertions for erecting a new building and the latter for his having undergone so much self-sacrifice as a European on behalf of the education of the Western part of Jaffna.

The Principal about 8 P. M. proposed a hearty vote of thanks to the worthy Chairman, the Retired Chief Justice of the State of Travancore who in spite of his ill-health condescended to be present on the occasion of the First Decennial celebration of the Chulipuram English Institution. *Com.*

## FOREIGN NOTES.

—Parliament was opened on the 19th ultimo.

—Great Britain and Italy are arranging a war scheme against the Dervishes.

—In the Benin Massacre, West Africa, only one out of 250 escaped.

—The Niger Company's Expedition is progressing favorably.

—The Plague Conference meets at Venice on the 10th inst.

—The Powers have taken prompt precautionary measures against the plague.

The British Government have appointed three Medical Inspectors to visit the Ports trading with India.

## LOCAL AND GENERAL

**Dispensary at Pungudutive.** A dispensary has been newly opened at this station to which Mr. N. J. Lawrence is appointed as the Medical Officer. This Officer is the brother of Mr. N. S. Lawrence of the Road Committee Jaffna, and a brother-in-law of Dr. J. M. Fry, the Medical Officer of Maradankadavalai. Mr. N. J. Lawrence was at first employed under Dr. T. B. Scott of Manipay. His next move was to Vangalai as the Medical Officer of the place which was then opened. His present appointment is a deserving one and it is hoped that he will soon rise higher in the Medical Department. *Com.*

**Y. M. C. A.** Mr. Louis Hieb B. A., the General Secretary of the Ceylon Association, returned to Colombo on the 11th ult. from Calcutta, where he went to be present at the fourth Biennial Y. M. C. A. Convention of India and Burmah. Regarding the work in Ceylon Mr. Hieb made preliminary arrangements for two Y. M. C. A. gatherings to be held probably in June, one in Jaffna and the other in Colombo. Among those who will be present are Professor W. W. White, Ph. D. D., Mc. Canaughy, M. A., Geo. Sherwood Eddy, B. A. and Maxwood Moorehead M. A.

**Ceylon made Matches.** manufactured by Messrs Gonsalves & Co. the famous pyrotechnists of Colombo are now on sale at Messrs. Lopiah and Co. the rising merchants of the Cathedral street, Jaffna, who will likely be appointed the wholesale Agents here. They are put up in the usual style boxes with a picture of the Colombo harbour which indicates the trade mark. They ignite with a flash, and will not miss fire like the ordinary kinds in damp weather. They are priced lower than ordinary qualities and being a Ceylon made article should meet with local patronage.

Printed at the Press of Strong and Asbury, Manippay.
Published by A. C. Mission and Tambiah Strong Cooke.